CC.No. 185/2010 நாள் : 09.07.2025

PW 1- திரு. தங்கவேலு

**முதல் விசாரணையின் தொடர்ச்சி:**

1) இது சம்மந்தமாக நான் காவல் துறையினருக்கு கொடுத்த 23.02.1996 ஆம் தேதிய புகார் மனுவை 24.02.1996 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு அ.த.சா.ஆ.68. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். (இந்த வழக்கில் 55 வைப்பீட்டாளர்களான 1)அவிநாசியப்பம், 2) கந்தசாமி கவுண்டர்,3) கண்ணம்மாள்4) சாம்ராஜ் 5)பாலகிருஷ்ணன் 6) சண்முகம் 7) மாரியம்மாள் 8) கிருஷ்ணசாமி 9) கமலா பாய் 10) நாச்சி 11) சிவகாமி 12) செல்வராஜ் 13) லட்சுமி 14) சுசிலா 15) கல்யாணி 16) வெங்டாசலம் 17) பாலன் 18) பரிமலா நீலா 19) ருக்குமணி 20) மங்கையர்கரசி 21)இமானுவேல் 22) அங்கம்மாள் 23) முருகன் 24) ரங்கசாமி EO பல்லடம் டவுன் பஞ்சாயத்து 25) அம்புஜம் 26) முருகவேல் 27) மகாலெட்சுமி 28) கலைச்செல்வி 29) பரிமலா 30) மீனாட்சி 31) சகிலா பானு அன்வர் 32) பாஸ்கர் 33) ஹரிசங்கர் திவாரி 34) செல்வராஜ் 35) சந்திரகாந்தி ஜெயராஜ் 36) முருகன் 37) ஈஸ்வரி 38) சாரதா 39) பாலசுப்பிரமணியன் 40) கிருஷ்ணா பாய் 41) மயிலா 42) பாத்திமா பீவி 43) சமுரூதின் 44) ஜெயலெட்சுமி 45) தண்டபாணி 46) குருவம்மாள் 47) ஜமீலா பிவீ 48) சுசிலா 49) விஜய ராகவன் 50) சங்கர் 51) ராணி 52) சரஸ்வதி 53) கண்ணன் 54) சிவக்குமார் 55) பழனிச்சாமி ஆகியோர் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) எதிரி ராஜன் பெயரில் மட்டும் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகாரில் தெரிவித்துள்ளேன் என்றும் புகாரில் சொல்லி உள்ள ஆவணங்களை புலன் விசாரனையில் போது ஆஜர் செய்வதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் காவல் ஆய்வாளருக்கு ராஜனின் வருகை பதிவேடு மற்றும் இறந்துபோன இரண்டாவது எதிரி மணியின் வருகை பதிவேட்டை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 57 வைப்பீட்டாளர்கள் யாரும் தனிப்பட்ட

முறையில் எதிரிகள் மீது எனது விசாரணைக்கு முன்பாக புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. அதேபோல் நான் மட்டும் ஆரம்பத்தில் விசாரணையை இரண்டு நாட்கள் விசாரணை செய்தேன் அதன் பின்பு உயர் அதிகாரியிடம் நான் விசாரணை சம்மந்தமாக ஒரு எழுத்துமூலமாக அறிக்கை கொடுத்தேன்என்றால் சரிதான்.

2) அதன் பின்னிட்டு என்னுடன் சேர்ந்து கிருஷ்ணக்குமார் , குருநாதன் ஆகிய அதிகாரிகளை மேற்கொண்டு விசாரணை செய்ய நியமித்து உத்தவிடப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் நாங்கள் மூவரும் விசாரணையை தொடர்ந்தோமா என்றால் தொடர்ந்தோம் இன்னொரு அதிகாரி சக்திவேல் என்பவரும் எங்கள் விசாரணையி குழுவில்சேர்ந்துக் கொண்டார். அதற்கு எங்கள் உயர் அதிகாரி உத்தரவு போட்டிருந்தார் என்றால் ஆமாம். எங்கள் விசாரணை குழு 57 வைப்பீட்டாளர்களையும் அழைத்து அவர்களது கணக்கில் பற்றாக்குறை உள்ளது குறித்து நாங்கள் தெரிவித்ததன் பேரில் எங்களுக்கு வாக்குமூலம் கொடுத்தார்களாஎன்றால் சரிதான்.

3) 18.01.1996 ல் திருப்பூர் கோட்ட அஞ்சலக அலுவலகத்தில் இருந்து பல்லடம் அஞ்சலக அலுவலகத்தில் மோசடி நடந்திருப்பதாகவும் அங்கு சென்று விசாரிக்க வேண்டும் என்று எனக்கு உத்தரவு பிறபித்த தன்ராஜ் யார் என்றால் கோட்ட தலைமையக அஞ்சலக உதவி கண்கானிப்பாளர் ஆவார். விசாரணை குழுவை அமைத்த அதிகாரி யார் என்றால் திருப்பூர் கோட்ட தலைமைய கோட்ட காண்காணிப்பாளர் ஓ.பி. நாரயணசாமி ஆவார். நான் பல்லடம் துனை அஞ்சல க அலுவலகத்திற்கு நான் வந்த போது அதன் உயர் அதிகாரி C.R. மணி என்ற 2 ஆம் எதிரி இருந்தார். அப்போது ராஜன் இருந்தாரா என்றால் இருந்தார். அன்று மல்லிகா என்ற வைப்பீட்டாளர் இருந்தார் என்றால இருந்தார் . நான் அப்போதே விசாரணையை ஆரம்பித்தேனா என்றால் ஆரம்பித்தேன். எங்கள் விசாரணை குழு விசாரணை முடித்த பின்பு எங்கள் உயர் அதிகாரிகளுக்கு விசாரணை குழு அறிக்கை சமர்பித்தேனா என்றால் சமர்பித்தேன். விசாரணை அறிக்கையில் நான் மட்டுமே

கையொப்பமிட்டேன். அந்த விசாரணை அறிக்கையில் உடன் பணியாற்றிய மற்ற விசாரணை குழு உறுப்பினர்கள் கையொப்பமிடவில்லை. நான் 23.02.1996 தேதியிட்ட புகாரானது போலீசிடம் நானகவே கொடுத்தேனா அல்லது உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் கொடுத்தேனா என்றால் உயர் அதிகாரி உத்தரவின் பேரில் கொடுத்தேன்.

4)அ.த.சா.ஆ.68 புகாரில் பக்கம் 9 ல் உள்ள pay-in slips and withdrawal forms received across the counter were disposed off by Sri.R.Rajan என்று நான் குறிப்பிட்டுள்ளது சரியா என்றால் சரிதான் ஆனால் கவுன்டரில் வருகின்ற pay-in slips and withdrawal forms எவை எல்லாம் கணக்கில் கொண்டு வரப்படவில்லை யோ அவற்றை ராஜன் அழித்துவிட்டார். வைப்பீட்டாளர்கள் பல்லடம் அஞ்சலகத்திற்கு சேமிப்பு கணக்கு ஆரம்பிப்தற்கு ஒருவிண்ணப்பத்தில் கையொப்பமிட்டு கொடுப்பார் அதில் உள்ள விவரங்களை அவரோ அல்லது வேறு யாரிடமோ கொடுத்து பூர்த்தி செய்யலாம். இந்த விண்ணப்பத்தை வாங்கிக் கொண்டு துனை அஞ்சலக அதிகாரி அதை பரிசீலனை செய்து அவர் முன்னிலையில் வைப்பீட்டாளர்கள் மாதிரி கையொப்பங்களை அந்த விண்ணபத்தில் பெற்றுக்கொள்வார் என்றால் சரிதான். இந்த மாதிரியாக வரும் வைப்பீட்டாளர்களுக்கு தனிதனியாக லெட்ஜர் கார்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றில்வைப்பீட்டாளர் எந்த தேதியில் பணம் வைப்பீடு செய்கிறாரோ அதே தேதியில் உடனுக்குடன் என்ட்ரி போட வேண்டும் என்றால் சரிதான். அதேபோல் வைப்பீட்டாளர்எந்த தேதியில் பணம் எடுக்கிறாரோ அதே தேதியில் உடனுக்குடன் என்ட்ரி போட வேண்டும் என்றால் சரிதான். அது தவிற அஞ்சலகத்தில் தினசரி வரவு மற்றும் பணம் எடுத்தல் சம்மந்தமாக உடனுக்குடன் லாங் புக்கு என்ற பதிவேட்டில் குறிப்பிட்டு பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். அஞ்சல விதி படி மேற் சொன்ன லாங் புக்கை பராமறிக்க வேண்டிய பொறுப்பு அஞ்சலக துணை அதிகாரி என்றால் சரிதான். வைப்பீட்டாளர் பணம் வைப்பு வைக்க வந்தால் கவுன்டர் ஃபாயிலுடன் கூடிய பேயிங் ஸ்லிப்பை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் அதை சேமிப்பு கணக்கை பார்க்கும் அஞ்சலக உதவியாளர் வாங்கி அதை வைப்பீட்டாளர்கொண்டு வந்த பாஸ் புக்கில் குறிப்பு

எழுதிவிட்டு வைப்பீட்டாளர் லெட்ஜரில் வைத்து அஞ்சல துணை அதிகாரியிடம் கொடுப்பார் அதை அதிகாரி பரிசீலனை செய்துவிட்டு லெட்ஜரில் இன்சியல் போட்டும் பாஸ் புக்கிலும் இன்சியல் போட்டு பேயிங் சிலிப்பை சரிபார்த்து விட்டு அஞ்சலக உதவியாளரிடம் கொடுத்துவிடுவார் அதை அவர் பெற்றுக்கொண்டு வைப்பிட்டாளரிடம் கவுன்டர ஃபாயில் மற்றும் பாஸ் புக்கு ஆகியவற்றை அஞ்சலக உதவியாளர் திருப்பி கொடுத்து விடுவார். இந்த விவரத்தை அஞ்சலக உதவி அதிகாரி தன் வசம் உள்ள லாங் புக்கில் உடனே குறிப்பு எழுதி விட வேண்டும்.

5) வைப்பீட்டாளர் பணத்தை எடுப்பதற்காக அஞ்சலகத்திற்கு வரும்போத வித்ட்ராவல் ஃபார்மில் அவர் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு கொடுக்கலாம் அல்லது அவர் கோரும் நபர் எவரேனும் பூர்த்தி செய்து கொடுக்கலாம். அஞ்சலக உதவியாளர் அதனை பெற்றுற்ககொண்டு வைப்பீட்டாளரிடம் இருந்து பாஸ் புக்கை பெற்று அதில் குறிப்பெழுதி அந்த வித்டராவல் ரூ 500 மற்றும் அதற்கு மேலான தொகையாக இருந்தால் அந்த வித்டராவல் ஃபார்ம் மற்றும் விண்ணப்பம் மற்றும் பாஸ்புக் மற்றும் வைப்பீட்டாளரின் லெட்ஜர் புக்கு மற்றும் ஸ்பெசிமன் சிக்னேச்சர் புக் ஆகியவற்றை அஞ்சலக உதவி அதிகாரி கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். மேலும் வித்டராவல் ஃபார்மில் பேலன்ஸ் ஆப்டர் ட்ரான்ஸ்சேக்ஷன் (BAT) மற்றும் அதற்கு முன்பு கடைசியாக நடைப்பெற்ற ட்ரான்ஸ்சேக்ஷன் (DLT) ஆகியவற்றில் குறிப்பு எழுதி அஞ்சலக உதவி அதிகாரியிடம் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த ஆவணங்களை பெற்றுக் கொண்ட அஞ்சலக உதவி அதிகாரி மேற்சொன்ன விதட்ராவல் ஃபார்மில் சொல்லப்பட்ட மற்றும் எழுதப்பட்ட குறிப்புகளும் வித்ட்ராவல் ஃபார்மில் உள்ள வைப்பீட்டாளர்களின் கையொப்பமும் அஞ்சலக அலுவலகத்தில் ஏற்கனவே வைத்துள்ள அந்த வைப்பீட்டாளர்களின் மாதிரி கையொப்பத்தையும சரிபார்த்து அந்த வைப்பீட்ாளர் தான் பணம் பெற வந்துள்ளார் என்பதை அஞ்சலக உதவி அதிகாரி உறுதிசெய்ய வேண்டும் என்றால் சரிதான். மேலும் வைப்பீட்டாளரின் லெட்ஜரில் தொகை உள்ளதா என்பதை உறுதிசெய்ய வேண்டும் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு அவர் பாஸ் புக், லெட்ஜர் ஆகியவற்றில் இன்சியல் போட்டும், வித்ட்ராவல் ஃபார்மில் கையொப்பமிட்டு மேலும் வித்ட்ராவல் ஃபார்மில் மாதிரி கையொப்பம் சரிபார்த்ததாக குறிப்பு எழுதியும் அவர் வசம் உள்ள லாங் புக்கில் இந்த குறிப்புகளை

எழுதிகையொப்பம்மிட வேண்டும் என்றால் சரிதான்.

6) அதன்பின்னிட்டு சேமிப்பு கணக்கு உதவியாளர் அந்த பாஸ் புக்கையும் வைப்பீட்டாளர் கேட்ட தொகையையும் வைப்பீட்டாளரிடம் கொடுத்துவிட வேண்டும் என்றால் சரிதான். அதேபோல் வருடம்வருடம் சேமிப்பு தொகையை அஞ்சலக அலுவலகத்தில் வட்டி தொகை சேர்க்கப்படும் அந்த வட்டி தொகை விவரத்தை வைப்பீட்டாளர் வருட வருடாம் மார்ச் 31 ஆம் தேதிக்கு பின்னிட்டு அவருடைய பாஸ் புக்கை அஞ்சலகம் கொணடு வரும் போது அதில் குறிப்பெழுதி கொடுக்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு மூன்று மாதங்களுக்குள் தனது சேமிப்பு கணக்கில் உள்ள தொகை குறித்து உறுதி செய்யவில்லை என்றால் அஞ்சலக அலுவலகத்தில் உள்ள லெட்ஜர் கணக்கில் உள்ள தொகை சரியாக உள்ளது என கருதப்படும் என்றால் சரிதான்.

7) நான் புகாரில் சொல்லியவாரு எதிரி ராஜன் எந்த மோசடியிலும் ஈடுபடவில்லை என்றும் எந்த தொகையும் கையாடல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நானும் எனது விசாரணைக்குழு அதிகாரிகளும் அஞ்சலக உதவி அதிகாரி மணியை இந்த பிரச்சனையில் காப்பாற்ற வேண்டும் என்றும், எதிரி ராஜன் நாங்கள் சொல்வது போல் எழுதி கொடுத்தால் ராஜனுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என்று உறுதி கொடுத்தோம் என்று சொன்னால் என்றால் அது பொய். நானும் எனது விசாரணைக்குழு அதிகாரிகளும் அவரிடம் பொய்யான உறுதிமொழி கொடுத்து ம் ராஜனுக்கு உயர் அதிகாரி என்ற முறையில் பொய்யான அழுத்தம் கொடுத்தும் ராஜன் செய்யாத தவறுகளை ராஜன் செய்ததாக நாங்கள் விசாரணைக் குழுவினர் சொல்ல சொல் ல ராஜனிடம் ராஜன் குற்றம் செய்ததுபோல வாக்குமூல கடிதங்கள் வாங்கிவிட்டதாக அவர் சொன்னார் என்றால் சரியல்ல.

8) உயர் அதிகாரியாகிய நாங்கள் அஞ்சலக உதவி அதிகாரி மணியை காப்பாற்ற வேண்டி அதற்கு

ஏற்ப ஆவணங்கள் தயாரித்து எதிரி ராஜனுக்கு எதிராக பொய் புகார் கொடுத்து நீதிமன்றத்திலும் நான் பொய் சாட்சியம் அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல.சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.07.09 18:28:09 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.